**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**
**DVC No.01/2025**
**மனுதாரர் தரப்பு சாட்சி:1**

| | |
|---|---|
| பெயர்: (ம.சா.1) இலக்கியா | தாலுக்கா: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | வயது: |

**2026ம் ஆண்டு மே மாதம் 04ம் நாள் திங்கள்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் வி.நிவேதா அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**ம.சா.1 குறுக்கு விசாரணை (எதிர்மனுதாரர் தரப்பு):–**

நான் B.Sc Computer Science வரை படித்துள்ளேன். எந்த ஆண்டு எந்த கல்லூரியில் படித்தேன் என்றால் வெள்ளகோவில் கலை அறிவியல் கல்லூரியில் 2010– 2013ம் ஆண்டு வரை படித்தேன். எனது சொந்த ஊர் என்னவென்றால் கரூர் மாவட்டம், வேலுச்சாமிபுரம் ஆகும். நான் கல்லூரியில் படிக்கும்போது எந்த முகவரியில் வசித்து வந்தேன் என்றால் நத்தக்காட்டுதோட்டம், ஆசிரியர் காலனி, மூலனூரில் வசித்து வந்தேன். தற்போது வெள்ளகோவில், இந்திரா நகரில் வசித்து வருகிறேன். எனது அம்மா, அப்பா எங்கு வசித்து வருகிறார்கள் என்றால் எனது அம்மா வெள்ளகோவிலில் உள்ள மயில்ரங்கத்திலும், எனது அப்பா கரூரிலும் வசித்து வருகிறார்கள். மேற்படி வெள்ளகோவில் இந்திரா நகரில் நான் மட்டும் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கும் எனக்கும் இடையே காதல் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எதிரிமனுதாரரின் பெற்றோர் வீட்டில் திருமணத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.05.04 13:48:08 +0530

எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.05.04 13:48:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.